<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>

<u>அ.வ.எண்.496/2015</u>

<u>நாள்.18.10.2023</u>

2023ம் ஆண்டு அக்டோபர் 18 ஆம் தேதி ரவி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு. R. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==============================================================

| | |
|---|---|
| பெயர் = ரவி | தகப்பனார் பெயர்= கலியபெருமாள் |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = 49 |

==============================================================

**<u>PW 1 மு.வி</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தாவா சொத்தை பொருத்து நான் செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை 7 அசல் வா.சா.ஆ.1, தாவா சொத்தை பொருத்து நான் செலுத்திய மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை 35 அசல் வா.சா.ஆ.2, எனது குடும்ப அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.3, எனது வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் <u>வா.சா.ஆ.4</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது.)